| | |
|---|---|
| அ.வ.எண். | 9/2013 |
| பெயர் | மாரியம்மாள் |
| கணவர்பெயர் | பாலகிருஷ்ணன் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 06.01.2020 |

**13, 15 முதல் 17, 19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சொத்து பாகம் ஆகவில்லை ஆகவே பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்ததெந்த சர்வே எண், எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. வழக்கு சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் குட்டப்பட்டி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து மொத்தம் எவ்வளவு ஏக்கர் என்றால் 9 ஏக்கர் இருக்கும். அவ்வளவாக படிப்பறிவு இல்லாததால் தெரியவில்லை. வழக்கு சொத்திற்கு நான்கு புற எல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குட்டப்பட்டி கிராமத்தில் உள்ள சொத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நங்கவள்ளி கிராமத்தில் உள்ள சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்தெந்த கிராமத்தில் எவ்வளவு சொத்துக்கள் என என்னால் சரியாக கூறமுடியாது என்றால் ஆமாம். மாரிமுத்து கவுண்டர் என்னுடைய தகப்பனார். அவர் எந்த தேதி, மாதம், வருடம் இறந்தார் என்பதை என்னால் கூறமுடியாது என்றால் ஆமாம். ஆராயி என்னுடைய அக்கா. அவரும் எந்த தேதியில் இறந்தார் என்பதை என்னால் சரியாக கூறமுடியாது என்றால் ஆமாம். மாரிமுத்துகவுண்டருக்கு சொத்து எந்த வகையில் பாத்தியம் என்றால் அது அவருடைய அப்பாவின் சொத்து. மாரிமுத்துகவுண்டரின் தகப்பனார் பெயரில் கிரையப்பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த கிரையப்பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு கிரையபத்திரங்களை தாக்கல் செய்யவில்லை எனவும், வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து கவுண்டருக்கு 2 மனைவிகள் என்றால் ஆமாம். மாரிமுத்துகவுண்டருக்கு யார் யாரெல்லாம் வாரிசுகள் என வம்சாவளி பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

ஒம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.